சென்பா நாற்பது

ச. கந்தசாமி



அறிமுகம்..

தமிழ் இலக்கிய வட்டாரத்தில் 'சென்' குறித்து ஓஷோவின் சொற்பொழிவுகள் தமிழ் மொழி பெயர்ப்பில் பல நூல்களாக கிடைக்கின்றன. ஹைக்கூ கவிதை வடிவத்திலும், சிறுகதை வடிவத்திலும் புழங்குகின்ற 'சென்' மரபு குறித்து, வெண்பா மரபில் இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இந்திய பௌத்த மரபின் பிற்கால திரிபான ஜப்பான் நாட்டு 'சென்' மரபானது, பல வகையிலும் தமிழ் சித்தர் மரபினை ஒத்ததாகவே இருப்பதை அறியலாம்.

இதிலுள்ள, கருத்துக்கள் 'சென்' வழியினுடையது... வடிவம் தமிழ் மொழியினுடையது... இரண்டையும் இணைத்து தொகுத்தது மட்டும்தான் நான் செய்தது. உங்களை போலவே இப்பாடல்களை சாட்சியாய் நின்று நானும் வாசிப்பதில் மகிழ்கிறேன்.

வெண்பா இலக்கணத்தை சரிபார்த்து உதவிய நண்பர் லோகநாதன் மற்றும் வரைகலை உதவிய நண்பர் சார்லஸ் ஆகியோருக்கு நன்றி..

"இந்திய ஞானியாம் ஓஷோ உரையென
சிந்திய சென்முத்து சொற்களை – முந்துதமிழ்
பெண்ணுக்கு வெண்பாவில் மாலையாய் சூட்டிபுத்தன்
தண்பதம் போற்றுகின்றேன் நான்".

(ச. கந்தசாமி)




பொருளடக்கம்

வ.எண்	தலைப்புகள்	பக்கம்
1.	ஒன்று	1
2.	தன்னாலே தோன்றும் வழி	2
3.	தவளை	3
4.	வானம்	4
5.	நதியழகு	5
6.	சாட்சியாய்	6
7.	புல் தானாக வளரும்	7
8.	மோனநிலை	8
9.	மாறா நிலை	9
10.	ஞானி	10
11.	கிளைக்கு திரும்பும் மலர்	11
12.	ஒரு கையின் ஓசை	12
13.	கண்ணாடி துசிதட்டி	13
14.	புத்தனைக் கொன்று விடு	14
15.	புத்தனுடன் சேர்ந்து சிரி	15
16.	புத்தனை தீயிலிடு	16
17.	பாடலுக்குள் பாசம்	17
18.	ஆறோடும் போக்கு	18
19.	சும்மா இரு	19
20.	உனக்குள்ளே புத்தன்	20
21.	அசையும் சுடர்	21
22.	வில்லாளி	22

வ.எண்	தலைப்புகள்	பக்கம்
23.	வெற்றுக் கோப்பை	23.
24.	ஓர் அதிர்வும் இல்லை	24.
25.	தென்றலைக் கொட்டினேன்	25.
26.	வெண்ணிலா வட்டம்	26.
27.	அசைவது	27.
28.	உபயோகம்	28.
29.	முரண்	29.
30.	வெற்றிடம்	30.
31.	அகத்துள புத்தன்	31.
32.	அற்புத மலர்	32.
33.	தங்க நிலா	33.
34.	அமிழ்து	34.
35.	தேநீர் விருந்து	35.
36.	நீலவானில் வெண்மேகம்	36.
37.	வெல்வார் இல்	37.
38.	சாட்சியாம் புத்தன்	38.
39.	உனக்கு நீயே ஒளி	39.
40.	திரு	40.

ஒன்று



ஒன்றினைத் தேடும் ஒருவன் ஒருபோதும்
ஒன்றினைச் சேர்வதே இல்லையாம் – ஒன்றையும்
தேடாமல் ஒன்றிலே ஒன்றி இருப்பவன்
நாடாமல் நாடடைந்தான் காண்.

தன்னாலே தோன்றும் வழி



வழியினைத் தேடியுன் வாழ்நாளை வீணாய்
கழித்திடாதே சென்வழியை நாடி – விழித்தெழு
உன்னாலே ஆவதொன்றும் இல்லையே ; ஓர்ந்துநில்
தன்னாலே தோன்றும் வழி.

தவளை




வழுக்கி விடுமாம் பயந்து நடந்தார்
பழைய குளத்தின் கரையில் – மனதை
அடக்கிடக் கற்றவர் ஆழ்ந்தார் தவளை
தடக்கென தாவியது கண்டு.

வானம்



இருப்பதே போன்று தெரியுமது எங்கும்
இருப்பதே இல்லை அறிவாய் – இருப்பதாய்
வானம் வழங்குகின்ற சொல்லில் அடங்காத
ஞானத்தை நாளுமே நாடு.

நதியழகு




உயர்ந்த பெருமலை ஓய்யார மேகம்
அடர்ந்த மலர்வனத்தின் அப்பால் நதியழகு
ஆறதனை ஓவியமாய்க் கண்டு மகிழ்ந்திரு
பேறதனைக் காண்பதே காண்.

சாட்சியாய்



அணியும் உடையை விழிப்போ(டு) அணிவார்
உணவைச் சுவைபட உண்பார் உணர்வுடன்
செய்யும் செயலனைத்தும் சாட்சியாய் காண்பவர்
உய்யும் வழியடைந்தார் ஈண்டு.

புல் தானாக வளரும்



வசந்தம் வரக்கூடும் வான்மழை பெய்யும்
அசந்திடுமோ எவ்வுயிரும் காரணத்தை எண்ணி
தளராமல் தன்னிலையில் வாளா விருந்தால்
வளராதோ தானாகப் புல்.

மோனநிலை



காட்டில் விறகு பொறுக்குவார் சென்மடத்தின்
தொட்டியில் தண்ணீர் நிரப்புவார் – கட்டில்லா
ஞானம் அடைந்தபின்னும் அஃதேதான் செய்கிறார்தாம்
மோனநிலை உற்ற(து) உணர்ந்து.

மாறா நிலை



நுந்தையும் தாயும் பிறக்காத போதில்நீ
எந்நிலை கொண்டிருந்தாய் அன்பனே சிந்திப்பாய்
எப்பொழுதும் எவ்விடத்தும் மாறா நிலையதனை
முப்பொழுதும் நெஞ்சில் நிறுத்து.

ஞானி




இருப்பதை ஏற்பார் எளிமையாய் வாழ்வார்
இருக்கும் இடத்தில் அமைதியை ஈர்ப்பார்
பொறுமையால் நெஞ்சம் நிறைந்திட்ட ஞானி
அருமையாய் வாழ்வார் நிலத்து.

கிளைக்கு திரும்பும் மலர்



வண்ணத்துப் பூச்சி சிறகை விரித்திடும்
மண்ணை விடுத்து மரக்கிளை சேரும்
கிளையை மறவா(து) உதிர்ந்த மலர்கள்
கிளைக்கே திரும்புதல் போன்று.

ஒருகையின் ஓசை




முழவிசையும் மூத்த குரலிசையும் தேடிக்
குழலிசையும் கேட்பவனே உண்மை விளங்க
உருவினைக் கண்டு மயங்கா மனத்தால்
ஒருகையின் ஓசையைக் கேள்.

கண்ணாடி தூசிதட்டி



கண்ணாடி தூசிதட்டி சுத்தமாக வேண்டும்
எண்ணமற்ற உள்ளொளியால் புத்தனாக வேண்டும்
எதனைநீ பெற்றபோது பெற்றவனோ எல்லாம்
அதனைநீ பற்றுவதே சென்.

புத்தனைக் கொன்று விடு



வேகும் வெயிலில் வழியினைத் தேடிநீ
போகும் வழியிலே புத்தன் எதிர்வந்தால்
புத்தனே என்செய்வாய் யோசனை செய்யாது
புத்தனைக் கொன்று விடு.

புத்தனுடன் சேர்ந்து சிரி




குனிந்தால் சிரிப்பார் நிமிர்ந்தால் சிரிப்பார்
இனிப்போ கசப்போ எதற்கும் முனிவின்றி
பித்தனைப்போல் வாயகல அன்பாய் சிரிக்கின்ற
புத்தனுடன் சேர்ந்து சிரி.

புத்தனை தீயில் இடு




மரப்பொம்மை புத்தனுக்கு தூபம் இடுவார்
மரப்பொம்மை ஏற்குமோ தூபம் மரணமில்லா
உண்மையாம் புத்தன் குளிர்காய புத்தனின்
பொம்மையைத் தீயில் இடு.

பாடலுக்குள் பாசம்



நாடறிந்த கேள்வியது கண்டால்தான் ஏற்பீரோ?
பாடலுக்குள் பாசத்தைப் பாரீரோ? – பூவுக்குள்
கள்ளிருப்பைப் பொன்வண்(டு) உணராதோ? கண்மூடி
உள்ளிருப்பை உண்மையாய்க் கொள்.

ஆறோடும் போக்கு



ஒன்று பலவாய் தெரிகின்ற போதிலே
ஒன்றை உணர உபாயங்கேள் – மன்றிலே
யாரோடும் சேராமல் தம்மத்தின் பாதையாம்
ஆறோடும் போக்கிலே போ.


சும்மா இரு





புத்தனை நாடி புதுவாழ்வு கேட்பவனே
சுத்தமெய் ஞானமிது சொல்லக்கேள் – நித்தமும்
நில்லாமல் பாய்ந்தோடும் பொய்மனதில் சிந்தனை
இல்லாமல் சும்மா இரு.

உனக்குள்ளே புத்தர்



வலக்கை அறைந்திடும் தேடுவார் தம்மை
உலக்கை பதம்பார்க்கும் ஞானத் துலக்கமின்றி
புத்தனாக வேண்டுமெனச் சொன்னால் உனக்குள்ளே
புத்தனைப் பாரடா என்று.

அசையும் சுடர்



காற்றின் திசையில் அசையும் சுடரானான்
ஆற்றின் அலையில் மிதக்கும் சருகானான்
தம்மத்தின் பாதையை ஏற்கும் பயணிதான்
தம்மமே ஆகிறான் காண்.

வில்லாளி



பத்திரண்டு ஆண்டுகள் வில்வித்தை கற்றாலும்
வித்தையில் தேர்ந்திட ஏலாது – கற்றபின்
வில்லையும் அம்பையும் விட்டுத் தொலைத்தவன்
வில்லாளி ஆகின்றான் பார்.

வெற்றுக் கோப்பை




கோப்பை நிரம்பியபின் தேநீரை ஏற்காது
கோப்பையுள் வெற்றிடம் போலிரு – செப்பமாய்
எப்போதும் உள்ளத்தை ஏற்கின்ற பாவனையில்
வைப்பார்க்கு வாழ்க்கை இனிது.


ஓர் அதிர்வும் இல்லை



அடர்ந்ததோர் காட்டிற்குள் செல்கின்ற போது
படர்ந்த சிறுபுல்லும் சேர்ந்தசைய வில்லையாம்
நீர்க்குளத்தின் மேற்பரப்பில் ஊர்ந்து நெளிகையில்
ஓர்அதிர்வும் இல்லையாம் காண்.

தென்றலைக் கொட்டினேன்






அடித்தளம் அற்றதோர் மூங்கிலின் கூடை
பிடித்தள்ளி வைக்கிறேன் பௌர்ணமிப் பொன்னிலா
எண்ணமில்லா உள்ளத்தின் கிண்ணத்தில் தூய்மையாம்
தென்றலைக் கொட்டினேன் நான்.

வெண்ணிலா வட்டம்



சிற்றலை ஆடுகின்ற பூங்குளத்து நீர்ப்பரப்பின்
சிற்றலை தாக்கி உடையுமாம் – குற்றமில்லா
வெண்ணிலா பிம்பம் உடைந்தாலும் சேர்ந்தாலும்
வெண்ணிலா வட்டமே தான்.

அசைவது



கற்றவர் பார்வையில் காற்றின் அசைவது
மற்றவர் சொல்வார் மறுத்ததை காற்றில்
அசைவது வெண்கொடி சென்குரு சொல்வார்
அசைவது மாந்தர் மனம்.

உபயோகம்



அச்சோளக் காட்டுக்குள் நிற்கின்ற பொம்மைக்கு
அச்சமும் இல்லை விழிப்புணர்வும் இல்லை
உபயோகம் உண்டதன் தோற்றத்தில் ஆங்கே
உபயோகம் உண்டெனில் தோன்று.

முரண்



முரண்களின் சேர்க்கை முழுமையாய் ஆகும்
முரண்களின் பாய்ச்சலில் புத்தன் நிரம்பினான்
நிர்வாணப் பாதையில் இல்லை இருநிலை
தேர்ந்தவன் உய்கிறான் காண்.

வெற்றிடம்



உட்பக்கம் ஏதுமற்ற மூங்கிலைப் போன்றவன்
உட்பக்கம் ஏதுமற்று தன்னியல்பில் நிற்கிறான்
வெற்றியும் தோல்வியும் தீண்டிவிடா தூரத்தில்
வெற்றிடமாய் வாழ்கிறான் காண்.

அகத்துள புத்தன்



கடந்ததை எண்ணிக் கலங்காதே நாளை
நடப்பதை நாடித் தயங்காதே – இன்று
நிகழ்வதை இக்கண வாழ்வைக் கவனி
அகத்துள புத்தனே நீ

அற்புத மலர்



அற்புதமாய் பூத்த மலர்சென் விளங்காத
கற்பிதங்கள் கைவிட்டு புத்தனின் பொற்பதம்
சார்ந்திருப்பார் கொண்ட ஒளிவிளக்கு தம்மத்தில்
வாழ்ந்திருப்பார் உய்யும் வழி.

தங்க நிலா



இந்திய வித்தாம் தியானமே சீனத்தார் சிந்தையில் *சான்*என வேர்விட்டு தங்க நிலவாக யப்பான் திருநாட்டில் பௌத்த மலராக *சென்*ஆன தாம்.

அமிழ்து



அசையா(து) இருப்பதுதான் ஆதாரம் ஆகும்
அசைகின்ற எவ்வுயிர்க்கும் காண்பாய் இசைவுடன்
வாழ்வார் தமக்கு விசையது புத்தனுக்குள்
ஆழ்வார் தமக்கோ அமிழ்து.

தேநீர் விருந்து



அவசரம் ஏதுமின்றி தேநீர் கலந்து

குவளையில் ஊற்றியே கொஞ்சம் கவனமுடன்

தேநீர் அருந்துவதும் கொண்டாட்டம் சென்வழியில்

தேநீர் விருந்தும் விழா.

நீலவானில் வெண்மேகம்



நீலவானில் வெண்மேகம் போலே மிதந்திடுவார்
காலமல்லா காலத்தில் புள்ளாய் வலம்வருவார்
மூலமான ஒன்றிலே மூழ்கிய ஞானிதான்
மூலமாய் ஆகிறார் காண்.

வெல்வார் இல்



போரிட்டு வெல்வாரும் வீரரே நெஞ்சுரத்தால்
போரிடாமல் வென்றார்பல் ஆயிரமாம் பாரிலே
கொல்வார் எனத்தெரிந்தும் போர்களத்தில் நிற்பாரை
வெல்வார் எவருமே இல்.

சாட்சியாம் புத்தன்



உடலாக இல்லை மனமாக இல்லை
நடந்திடப் பாதையும் இல்லை – உடன்பட்டு
சாட்சியாய் நின்று நிகழ்வதைக் காண்பவன்
சாட்சியாம் புத்தனே தான்.

உனக்கு நீயே ஒளி



அன்றாட வாழ்வே அனைத்துமாம் ஞானமிதை
வென்றிட யாரையும் பின்பற்ற வேண்டாம்
தனக்குள்ளே பேசா நிலையினைப் பெற்றால்
உனக்குநீயே ஆவாய் ஒளி.

திரு



குணமது வாழ்வில் நிறைந்திருக்கும் மாறா
மணமது மெய்வழியைக் காணும் கணமது
*சென்*என்றால் ஓய்வுடன் யாதொன்றும் ஏற்கின்ற
தன்மை வழங்கும் திரு.

உதவிய நூல்கள்

1	‘ஸென்’ னுடன் நடந்து.. ‘ஸென்’ னுடன் அமர்ந்து..	ஓஷோ (தமிழில் சிங்கராயர்)	கவிதா பப்ளிகேசன்ஸ்
2	பிரபஞ்ச ரகசியம் (ஸென் ஹைகூ)	ஓஷோ தமிழாக்கம் செந்தூரம் ஜெகதீஷ் சுவாமி அம்ரித்யாத்ரி	கவிதா பப்ளிகேசன்ஸ்
3	‘ஸென்’ – பரவெளியின் பரவசங்களும் பாடல்களும்	ஓஷோ தொகுப்பு: சுவாமி கிருஷ்ண பிரபு தமிழாக்கம்: சுவாமி ஆனந்த் பரமேஷ்	கவிதா பப்ளிகேசன்ஸ்
4	இஸான் – கால்தடம் இல்லா நீலவானம்	ஓஷோ தமிழாக்கம்: வானமாமலை	கண்ணதாசன் பதிப்பகம்
5	புல் தானாக வளருகிறது (ஜென்–அற்புதங்கள்)	ஓஷோ தமிழில் புவியரசு சுவாமி ஆனந்த பரமேஷ்	கண்ணதாசன் பதிப்பகம்

